செய்தி வெளியீடு எண் : 160 நாள் : 24.01.2023

**<u>செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் காந்தி மண்டபம் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்</u>**

சென்னை, கிண்டி, காந்தி மண்டபம் வளாகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் அயோத்திதாசப் பண்டிதர் நினைவு மண்டபம் பணிகள், வ.உ.சிதம்பரனார், மருது சகோதரர்கள், வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகியோரது சிலைகள் அமைக்கும் பணிகள் மற்றும் தியாகச் சீலர்களின் நினைவு மண்டபங்களை மேம்படுத்தும் பணிகள், ஆகிய பணிகளை இன்று (24.01.2023) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ,ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**<u>மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:</u>**

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில், செய்தித் துறையின் சார்பில், காந்தி மண்டபத்தில் ஏற்கனவே உள்ள தலைவர்களுடைய அரங்கங்கள், சுதந்திரப் போராட்ட தியாகிகளுடைய அரங்கத்தில் உள்ள புகைப்படங்கள் மற்றும் அரங்கம், மொழிக் காவலர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள அரங்கம், இவையெல்லாம் பராமரிக்கப்படுவதோடு, புதிதாக அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு அரங்கம் அமைவதோடு, அந்த அரங்கத்திற்கு அருகிலேயே நூலகமும் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, இன்றைக்கு ஏறத்தாழ 60 சதவீதம் பணிகள் நடைபெற்று முடிந்திருக்கிறது, மீதமுள்ள பணிகளும் விரைவாக நடைபெற்று வருகிறது. மேலும், ஏற்கனவே சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட, வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலை, மருது சகோதரர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கின்ற பணியும் நடைபெற இருக்கின்றது. முன்னாள் முதலமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய சிலையும் இங்கே அமைக்கப்பட இருக்கிறது.

கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்கள் இழுத்த செக்கு இங்கே இருக்கிறது. அதனுடைய அரங்கம் புதுப்பிக்கப்படுவதோடு, அவருக்கு மார்பளவு சிலையும் வைக்கப்படுகிறது. வ.உ.சிதம்பரனார் அவர்கள் கோவை மத்திய சிறையில் பல ஆண்டு காலம் இருந்தது மட்டுமல்ல, அங்கேதான் அவர் செக்கு

இழுத்தார். எனவே, அதனுடைய நினைவாக கோவை வ.உ.சி. மைதானத்தில் அவருடைய திருவுருவச் சிலையும் அமைக்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கும், மொழிக் காவலர்களுக்கும், மக்களுக்காக வாழ்ந்து பணியாற்றிய தலைவர்களுக்கு நினைவு அரங்கம் அமைத்து வருகிறது. ஏற்கனவே மணிமண்டபம் என்று அமைக்கப்பட்டு வந்ததை, ஒரு கொள்கை முடிவு எடுத்து, அரங்கம் என்கிற பெயரிலே இன்றைக்கு அமைக்கப்பட்டு வருவதற்குக் காரணம், அந்த அரங்கத்தில் அரசு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், பொதுமக்கள் சுபகாரியங்கள் நடத்துவதற்கும், அனைத்து வசதிகளுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

சென்னை, கிண்டி, காந்தி மண்டபத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கிற அரங்கங்கள், மணிமண்டபங்கள், சிலைகள் எல்லாம் ஏறத்தாழ ரூ.5.81 கோடி மதிப்பில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு ஏறத்தாழ ரூ.2.48 கோடி மதிப்பில் அரங்கமும், அவருடைய திருவுருவச் சிலையும், நூலகமும் கூடிய அரங்கமும் அமைக்கப்பட்டு வருகிறது.

எனவே, இந்தப் பணிகளையெல்லாம் விரைந்து முடிக்க வேண்டும் என்பதற்காக இன்று நேரில் ஆய்வு செய்யப்பட்டது, அனைத்து பணிகளும் திருப்திகரமாக நடைபெற்று வருகிறது. இன்னும் பணிகளை விரைவுப்படுத்த வேண்டும் என்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** பணிகள் நிறைவடைய சரியாக எவ்வளவு நாட்கள் ஆகும்?

**பதில்:** வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கப்படும் பணிகள் ஏறத்தாழ 98 சதவீதம் நடைபெற்று முடிந்திருக்கிறது. அதேபோல, மருது சகோதரர்களுக்கான திருவுருவச் சிலை அமைக்கும் பணிகளில் இன்னும் 5 சதவீதம் பணிகள் முடிக்க வேண்டியிருக்கிறது. இப்பணிகள் முடிவுற்ற பிறகு ஒவ்வொன்றாக மக்கள் பார்க்கக்கூடிய வகையில் திறக்கப்படும்.

----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in